# தென்றல்

ஆரம்பம் : 06.04.2008 பதிவு இலக்கம் : 361910

காற்று - 15 | சுகந்தம் - 56 | ( தை - பங்குனி) 2023




தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை மாநகரில் புதுப் பொலிவுடன் லோட்டஸ் மஹால் தங்குமிடம்!

## (LOTUS MAHAL LODG)

நாளாந்தம்/வாராந்தம்/மாதாந்தம் என AC/NON AC
வசதிகளுடன்விற்பனைப் பிரதிநிதிகளுக்கு உகந்ததாக
நியாயமான விலையில் வசதியான அறைகள்
வாடகைக்குப் பெற இன்றே நாடுங்கள்.

இல-61/2, யாட் வீதி,
கல்முனை.





தொலைபேசி:- 0770165133/
0760824059





Email:- *kanthaswamy @gmail.com*
*Free email accounts/Register today at*
*mail.com*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
18 MAR 2023
யாழ்ப்பாணம்

யாழ். மாநகர சபை
08 MAR 2023
தாபனப்பகுதி

ஆரம்பம் : 06. 04. 2008

# தென்றல்
# THENDRAL

44/1, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.
தொ.பே: 0776983597
பெக்ஸ்: 0652227542
E-Mail :kirupabatticaloa@yahoo.com
இணையம் : www.Thendralbook.com

**ஆசிரியர்/ வெளியீட்டாளர்**
**க.கிருபாகரன்**

**ஆசிரியர் குழு**
கலாபூஷணம் மு.தம்பிப்பிள்ளை
கலாபூஷணம்
இ.கோபாலபிள்ளை
திருமதி.கவிதா கிருபாகரன்
கலாபூஷணம்
ஆ.அரசரெத்தினம்
செல்வி த. செல்வராணி
**ஓவியம்**
**சி.புரவர்த்தனி**

ஆக்கங்களுக்கு ஆக்கியோரே
பொறுப்பாளிகளாவர் ( ஆ-ர் )

## உள்ளே...

- இயற்கை (ஆசிரியர் கருத்து)......02
- தென்றலின் தேடல்......03
- தமிழர் தைப்பொங்கல். 07
- பிள்ளை நிலா............08 (சிறுகதை)
- மறைந்தும் மறையாத மாமறையோன் மணிப்புலவர் மருதூர் மர்ஹிம் மஜித்! ............ 14 ( கவிதை )
- தென்றல் சஞ்சிகைக்கு உயர் விருது .............. 15 ( கட்டுரை )
- புள்ளியில் கல்வி .......... 17 ( கவிதை )
- கொரோனா பெயரில் ஒரு அர்ச்சனை........... 18 ( சிறுகதை )

## ஆண்டுச் சந்தா!
2023 ஆம் ஆண்டுக்கான சந்தா
ரூபாய் 1000.00
வங்கி - மக்கள் வங்கி
நகரக்கிளை- 113100170002181
(க.கிருபாகரன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இயற்கை"

இது அதிசயங்கள் நிரம்பிய உலகம். அவ்வப்போது நம்மைச் சுற்றி எண்ணிப் பார்க்க முடியாத பல விடயங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

நாளாந்த நடப்பில் பல விடயங்களை விஞ்ஞானத் தொழில்நுட்ப ஆய்வுகளின் மூலம் சாதிக்க முடியும், என்றாலும் கூட, சில விடயங்கள் எப்போதுமே சாதிக்கப்படுவதில்லை.

ஐம்பூதங்களின் இயக்கத்தால் வாழும் நாம், தேவையென வரும் போது மட்டுமே அதனைப் பற்றிச் சிந்திக்கிறோம். மற்ற நேரங்களில் அவற்றை நாம் கண்டுகொள்வதில்லை.

தற்போது நாட்டின் பல பாகங்களிலும் வரட்சி காலநிலை மாறி, மழை பெய்ய ஆரம்பித்துள்ளது. என்றாலும் கூட, பெரும்பாலான கிராமங்களில் குடிப்பதற்குச் சுத்தமான நீர் இல்லை.

எங்கோ காட்டுக்குள் ஊற்றெடுக்கும் நீர் நிலைகளைத் தேடிப் பிடித்து, நீரினைப் பெற்றாலும் கூட, அவை ஒரு காலகட்டத்தில் வறண்டு போய் விடுகின்றன.

எனவே, மக்கள் தங்களுக்கான குடிநீரையும்,அன்றாடத் தேவைகளுக்கு வேண்டியளவு நீரையும் தூரப் பிரதேசங்களில் இருந்தே எடுத்துவர வேண்டிய நிலை தொடர்கின்றது.

இவ்வாறான நிலையில் இம்மக்கள் உரிய நீர் வசதியினைப் பெறச் சம்பந்தப்பட்டோர் வழிவகைகளைச் செய்திட வேண்டும். அப்போதுதான் அவர்கள் தமது தேவைகளை உரிய வேளையில் செய்து, நவீன மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க முடியும்.

என்றென்றும் அன்புடன்

ஆசிரியர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# தென்றலின் தேடல்

- க.கிருபாகரன் -

## சின்னத்தம்பி தங்கராசா

மட்டுநகரிலிருந்து கிழக்கே நீர்வளமும், நிலவளமும், கலையோடு, கல்வி வளமும் நிறையப்பெற்ற, ஒற்றுமையின் பொக்கிஷம் என்ற பெருமிதத்தோடு அழைக்கப்படுகின்ற புதுக்குடியிருப்பு மண்ணில் அவதரித்து, கிராமியக் கலையைத் தன் உயிர் மூச்சாகக் கொண்டு, ஓயாத அலையாகச் செயற்படும் சின்னத்தம்பி தங்கராசாவைத் **"தென்றலின் தேடல்"**- வாயிலாக வெளிக் கொணர்வதில் **"தென்றல்"**- பெருமையும், பேருவகையும் அடைகிறது.

### குடும்பப் பின்னணி

இவர் 29.10.1954 இல் வேலாப்போடி சின்னத்தம்பிக்கும் - நல்லதம்பி சந்தணப் பிள்ளைக்கும் மகனாக அவதரித்தார். இவர் தனது இல்லத் துணைவியாக சங்குபதியைக் கரம்பிடித்து, ஜெயக்காந்தன், கோபாலகிருஸ்ணன், இன்பராசா மற்றும் யுவராசாவை மகன்களாகப் பெற்றெடுத்தனர். இவர்கள் இன்று கலைத்துறையில் பெயர் சொல்லிக் குறிப்பிடுமளவுக்கு பல உயரிய சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

### கல்விச் செல்வம்

தனது ஆரம்பக் கல்வியினை புதுக்குடியிருப்பு மெதடிஸ்தமிஷன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் (தற்போது மட்/மட்/ புதுக்குடியிருப்பு கண்ணகி மகாவித்தியாலயம்), தரம்- 10 வரை மட்/ மட்/ ஆரையம்பதி மகாவித்தியாலயத்திலும் கற்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கலைத்துறை ஈடுபாடு

பாடசாலைக் காலம் முதல் கலைத்துறையில் ஈடுபாடு கொண்டிருந்த இவர், தரம்- 5 படிக்கும் போது (1964) **"மதுரவாசன்"-** நாட்டுக் கூத்தில் **"தோழி"-** பாத்திரமேற்று, நடித்து, தனது கலைப் பயணத்தை ஆரம்பித்தார். அத்தோடு தரம்- 6 இல் கல்வி கற்கையில் (1965) **"அலங்காரரூபன்"-** நாட்டுக் கூத்தில் நடித்துப் பெயரும், புகழும் பெற்றார். இவ்வாறு பல வடமோடி மற்றும் தென்மோடி கூத்துக்களிலும், சமூக, சமய, ஹாஸ்ய நாடகங்களிலும் நடித்துப் பாராட்டுப் பெற்ற சின்னத்தம்பி தங்கராசா தனது கலைப்பயணத்தினைத் தடைகளைத் தாண்டித் தொடரலானார்.

பாடசாலை, இளைஞர் அமைப்புக்கள், கலைமன்றங்கள் மற்றும் ஆலயங்களோடு இணைந்து மேற்படி கலை நிகழ்வுகளில் ஆற்றுகையினை வெளிக்காட்டிய இவர், தனது 22 ஆவது வயதில் 18.04.1976 ஆம் ஆண்டு **"கதிரவன் கலைக்கழகம்"-** எனும் கலைசார் தாபனமொன்றை தாபித்து, இதனூடாகக் கலையுலகில் பிரவேசிக்க ஆரம்பித்தார்.

1976 ஆம் ஆண்டு **"சதிகாரத் தம்பியால் அலைந்த உறவு"-** எனும் சமூக நாடகமும், **"போடியார் வீட்டுக் கல்யாணம்"-** எனும் நகைச்சுவை நாடகமும் இவரால் பிரதியாக்கம் மற்றும் நெறியாள்கை செய்யப்பட்டு, உழவு இயந்திரங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட அரங்கில் அரங்கேற்றப்பட்டன.

1976 ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு வருடமும் புதுக்குடியிருப்புக் கண்ணகையம்மன் சடங்கினைச் சிறப்பித்து, இவருடைய கலைநிகழ்வுகளில் ஏதாவதொன்று அரங்கேற்றம் காணும். இவர் கண்ணகையம்மன் ஆலயச் சடங்கினை முன்னிட்டே கலை நிகழ்வுகளைத் தயாரிக்க அல்லது நெறியாள்கை செய்ய, ஆரம்பிப்பார். தயாரிக்கப்படும் கலைநிகழ்வுகள் புதுக்குடியிருப்பு மண்ணில் அரங்கேற்றப்பட்டதைத் தொடர்ந்து, அயற்கிராமங்களில் ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண் டும் மேடையேற்றப்படும். குறிப்பாக தாழங்குடா, கிரான்குளம், ஆரையம்பதி, கோவில்குளம், மண்முனை, மாவிலங்கந்துறை, கல்லடி, நாவற்குடா, பன்குடாவெளி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைக்காடு, அரசடித்தீவு மற்றும் மகிழடித்தீவு முதலான கிராமங்களைக் கூறலாம்.

கூத்து, நகைச்சுவை நாடகம், புராண மற்றும் இதிகாச நாடகங்களைத் தயாரித்து, நெறியாள்கை செய்து, இவர் அரங்கேற்றிய போதும், **"விடிய விடிய ஆடும் கரகம்"**- இவரை **"கரகம் பழக்கிற தங்கராசா"**- என்று அடையாளப்படுத்தியது.

இதுவரை 18 புராண மற்றும் இதிகாச நாடகங்களையும், 28 சமூக நாடகங்களையும் தயாரித்து அரங்கேற்றிய இவர், 1989 ஆண்டு முதல் **"கரகாட்டம் அல்லது கிராமிய நடனம்"**- எனும் துறையில் பிரவேசிக்கலானார். இதுவரை சுமார் 50 வகையான கரகாட்டங்களைத் தயாரித்துள்ளார். இதில் 31 கரகாட்டங்கள் நீண்ட சரித்திரக் கதைகளை பாடுபொருளாகக் கொண்டு அமைந்தது.

இவற்றுள் மயில் இராவணன் சண்டை, ஆரவள்ளி திருமணம், அல்லி திருமணம், உருத்திர சேனன் சண்டை, பாண்டவர் வைகுந்தம், பாஞ்சாலி சபதம், குயலவன், தர்மபுத்திரர், பகாசூரன் சண்டை, செம்மனச்செல்வி முதலிய கரகாட்டங்களைக் குறிப்பிடலாம். மேற்படி கரகாட்டங்கள் மட்டக்களப்பின் பல கிராமங்களில் வருடாவருடம் இடம்பெறும் திருவிழாக்கள் மற்றும் உற்சவங்களின் போது அரங்கேற்றப்பட்டமை சிறப்பம்சமாகும். பிள்ளைகள் ஆடுகின்ற இக்கரக நடனம் அனைவரையும் விரும்பிப் பார்க்கச் செய்யும் விதமாக அமைந்திருந்தது.

அக்காலத்தில் அனேகமான போட்டி நிகழ்வுகளிலும் இவரின் கரகம், காவடி, வசந்தன், கும்மி மற்றும் கோலாட்டம் முதலான கலை நிகழ்வுகள் வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. 1993 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட **"சராசந்தன் சமர்"**- எனும் 5 மணித்தியாலம் கொண்ட கரகாட்டத்தினை 20 நிமிடமாகச் சுருக்கி மட்டக்களப்பு மாவட்டச் செயலகம் நடத்திய போட்டி நிகழ்வில் பங்குபற்றி, முதலாம் இடத்தினைப் பெற்றமை தங்கராசாவின் திறமைக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது.

இவர் தனது சகல கலைப் படைப்புக்களையும், நிகழ்வுகளையும் **"கதிரவன் கலைக்கழகம்"**- ஊடாகவே நிகழ்த்தி வந்தமையினை காணக் கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பெற்றுள்ள பாராட்டுக்கள், விருதுகள், கௌரவங்கள்

- புதுக்குடியிருப்பு கண்ணகையம்மன் அரங்கிலும், மாவட்டத் திலுள்ள ஏனைய ஊர்களிலுள்ள ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக்கள் மற்றும் சடங்குகளின் போது இவர் கலைத் துறைக்கு ஆற்றிக் கொண்டிருக்கும் சேவைக்காகப் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.
- 2002 ஆம் ஆண்டு மட்டக்களப்பு கச்சேரி வழங்கிய **“கலை இலக்கிய முதுசொம் விருது”.**
- 2009 ஆம் ஆண்டு மண்முனைப்பற்று பிரதேச கலாசாரப் பேரவை நடத்திய சாகித்திய விழாவில், இவரது சேவையைப் பாராட்டிக் **“கலைஞர் கௌரவம்”**- அளிக்கப்பட்டது.
- கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வழங்கிய **“வித்தகர் விருது”.**
- கலாசார அலுவல்கள் திணைக்களம் வழங்கிய **“கலாபூஷணம் விருது”.**
- அகிலன் பவுண்டேசன் நடாத்திய கலைஞர் கௌரவிப்பில் பத்மஶ்ரீ பாரதிராஜா வழங்கிய **“கிராமியக் கலைஞர் கௌரவம்”.**
- கதிரவன் பட்டிமன்றப் பேரவை வழங்கிய **“கதிரவன் தந்தை விருது”.**

### இவரால் தாபிக்கப்பட்ட கதிரவன் கலைக்கழகங்கள்

- கதிரவன் விழிப்புணர்வு வீதி நாடகக்குழு.
- கதிரவன் பாலர் பாடசாலை.
- கதிரவன் கல்வி நிலையம்.
- கதிரவன் சஞ்சிகை.
- கதிரவன் சமூக அபிவிருத்தி நிறுவனம்.
- கதிரவன் பட்டிமன்றப் பேரவை.

இவ்வாறாக கலை, இலக்கியம், சமூகப்பணி எனப் பரந்துபட்ட வகையில் தனது ஈடுபாட்டைச் செலுத்திக் கொண்டிருக்கும் சின்னத்தம்பி தங்கராசாவின் முயற்சிகள் எதுவித தங்கு தடையுமின்றி நடந்தேற வேண்டுமெனத் **“தென்றல்”**- மனதார வாழ்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-கவிதை-

# தமிழர் தைப்பொங்கல்!

-கவிஞர் க.ரெட்ணையா, கன்னன்குடா-

கதிரவன் உதித்திடும் வேளையில்
கண் விழித்தெழுந்து நாம் காலையில்
புதிதாக விளைந்த நெல்மணி குத்தி
புதுப்பானையில் பால் பயறிட்டு பொங்குவோம்
பொங்கிடும் வேளையில் சந்தோசம்
பொலிவுடன் இல்லத்தில் வந்திடும்
மங்கலம் தந்திடும் தைப்பொங்கல்
மார்கழி விடை பெற்றுச் செல்ல வந்ததே!

மனிதனாய் பிறந்திட்டால் மண்மீது
மற்றோர்க்குத் தீங்கு செய்யாது
இனிமையாய்ப் பேசி இயன்ற உதவியைச் செய்து
இன்பமாய் வாழ்வதே வாழ்க்கை-அந்த வகையில்
கனிவுடன் உழவன் காணியில் நட்ட
கதிர் கொய்து குத்தி அரிசாக்கி
புனிதமாய் நெல் பால் சர்க்கரையிட்டு பொங்கி
புத்தொளி தந்திடும் கதிரவனுக்கு படைத்து வணங்குவான்!

நன்றி கூறும் தைப்பொங்கல்
நல்லதே செய்திட வேண்டுமென்ற
எண்ணத்தை மனதில் உண்டாக்கும்
இதுவே தமிழர் பண்பாடு
கண்ணியமுடன் நாம் தைப்பொங்கலிட்டு
கதிரவனுக்குப் படைத்து வணங்கி
தன்னலம் இன்றித் தரணியில் வாழ்வோம்
தமிழர் பண்பாட்டைக் கூறும் தமிழர் தைப்பொங்கல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-சிறுகதை-

# "பிள்ளை நிலா"

-ந.கீர்த்தனா-

அதோ தொலைவில் ரகுவரன் சைக்கிளில் வந்து கொண்டிருக்கிறார். அவரைத் தரகன் சின்னராசா வழிமறித்து, **"ஏய்.. ரகு, உண்ட மகள் நிலாவுக்கு நல்ல இடத்தில சம்பந்தம் ஒண்டு இருக்கு. நீ சரின்னு சொல்லு.. பேசித் தாறன். கால் தேடி வார சந்தர்ப்பத்த தவற விட்டுறாத. அப்புறமா வருத்தப்படுவ. அந்தளவுக்கு மனுசங்க எல்லாம் நல்லம். என்ன பேசுவோமோ.?"**

**"நீ சொல்லுற எல்லாம் என் காதுக்கு கேக்காது. எண்ட மகள் டொக்டர். அவளுக்கு ஏத்த மாதிரி, அவள்ட தரத்துக்கு ஏத்த ஜோடியை பெத்த அப்பன் நான்தான் பாக்கணும். உனக்கு எப்படித் தெரியும்? நீ உன் வேலையைப் போய்ப்பாரு.."**

**"ஓஹ்.. பெரிய டொக்டராம் டொக்டர். இப்ப காலம் ரொம்பக் கெட்டுப் போய்க் கெடக்கு"**- என்று வழி விட்டுச் சென்றார் சின்னராசா.

ரகு சாதாரண கூலித் தொழிலாளி. மனைவி கமலாவுக்கு யானைக்கால் நோய். ரகு- கமலா தம்பதிக்கு ஒரே பிள்ளை. அந்தக் குடும்பம் ரகுவின் வருமானத்தை நம்பித்தான் இருக்கிறது. தன் கனவுகளை மகள் நிலா நிறைவேற்றி விடுவாள்- என்ற நம்பிக்கை பெற்றோருக்கு இருந்தது.

நிலா கெட்டிக்கார மாணவி. உயிரியல் பீடத்தில் கல்வி கற்கிறாள். அவளை எப்படியாவது டொக்டர் ஆக்கிவிட வேண்டும் என்று ரகு வெறியாய் உழைக்கிறார்.

மகளைப் பற்றிய நினைவுகளோடு, வீட்டை அடைந்தார் ரகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தின் கரையோரம் குச்சிக்குடிசை. கிடுகு வேலியால் அடைக்கப்பட்ட அரண், வாசலில் பூவல்.. வீட்டின் சகல தேவைகளுக்கும் அங்கிருந்துதான் நீரை பெற்றுக் கொள்ள ஏற்பாடு. முற்றத்தில் ஒரு தென்னை. வேலியில் ஒரு முருங்கை மரம். குடிசையில் இரு அறைகள். அறைகள்- திண்ணைப் புற்று மண்ணினால் கட்டப்பட்ட சுவர்கள். இவைதான் ரகுவின் மாளிகை.

வீட்டுக்குள் வந்தவர் **"கமலா.. கமலா.. வயித்தக் கிள்ளுது. சாப்பாட்ட வை. நிலா எங்க..?"**

**"அவள் படிச்சிட்டு இருந்தவள்.. தூங்கிட்டாள் சாப்பிட எழுப்புங்க.."**

**"வேணாம் தூங்கட்டும். தூங்கி எழுந்ததும்,சாப்பிடட்டும். படிச்ச களைப்பில தூங்குது பிள்ள"-** என்று சொல்லி விட்டு, வரும் வழியில் நடந்த சம்பவத்தைக் கூறினான் ரகு.

அப்போது வானொலிச் செய்தியொன்று அவர்கள் காதுகளை வந்தடைகிறது.

இலங்கையில் சுற்றுலா வழிகாட்டி ஒருவருக்கு கொரோனா, நாடு முழுவதும் மறு அறிவித்தல் வரை ஊரடங்கு..

செய்தியைக் கேட்ட கமலா ரகுவை நோக்கினாள். ரகுவின் முகம் வாட்டமுற்றது. அதை உணர்ந்த கமலா, **"என்னாங்க.. நம்ம பொண்ணுதான் டொக்டருக்குப் படிக்கிறாளே, இந்த முறையோட அவள் கௌம்பிடுவாள். அதுவரைக்கும் நாம கொஞ்சம் சகிச்சுக் கொண்டு தான் இருப்போமே.."-** என வார்த்தைகளால் தேன் வார்த்தாள்.


**"நீ சொல்றதும் சரிதான். இனி வேலைக்குப் போக முடியாமத்தான் இருக்கும். நீ இப்போ இருக்கிறதச் சிக்கனமாப் பயன்படுத்திக்கோ, இந்தா.. இண்டைய காசு. கவனமாச் செலவழி.."-** என அன்றைய சம்பளத்தைக் கொடுத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேசமயம் நிலாவும் எழுந்து விட்டாள். **“வா கண்ணு.. சாப்பிட்டுத் தூங்கலாம்..”**- என ரகு அழைக்க, **“சரிப்பா.. வரேன்..”**- என நிலா அவனருகில் வர, ஒரு வாய் எடுத்து ஊட்டி விட்டான் ரகு.

அப்போது கைப்பேசி சிணுங்கியது. அழைத்தவள் நிலாவின் தோழி வைசு.

**“ஹேய்.. நாடு முழுக்க ஊரடங்காம். நாளையிலருந்து வகுப்பு எதுவும் நடத்தமாட்டாங்களாம்டி. இந்த வருசம் என்னத்தத்தான் எழுதுறதோ தெரியாது. எல்லாம் படிச்சு முடிக்கவும் இல்ல..”**- என்றவாறு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் உரையாடல் நீண்டு முடிந்தது.

ஊரடங்கினால் பாடசாலையோ, வகுப்புக்களோ இல்லாதபோது, பழைய பாடங்களை மீட்டு, படித்துக் கொண்டிருந்தாள் நிலா. அப்படியே நாட்கள் கடந்தன.

அன்றும் ஃபோன் அலறியது. மீண்டும் நண்பி வைசுதான். **"ஹேய் நிலா, நீ கெமிஸ்ரில அயன் சமநிலை கேள்வி செய்ய, இயலாம இருக்குனு சொன்னியே, இப்போ ஒன்லைன்ல சூம்ல வகுப்பு செய் றாங்களாம்டி, முடிஞ்சாப் போய்ப் பாரு. அதோட லிங்க உனக்கு மெசேஜ் பண்ணி விடுறன்.."**- என அவள் பேசி முடித்தாள்.

எப்படியாவது பார்க்கணும்னு பக்கத்து வீட்டுப் மாமாவை அணுகிக் கேட்டாள். அவரும் சம்மதிச்சு இரண்டு நாட்கள் ஃபோனை கொடுத்திட்டு, மூன்றாவது நாள் வெறுங்கையோடு அனுப்பி விட்டார்.

எதுவுமே சொல்லாமல் மூலைக்குள் இருந்து அழ ஆரம்பித்து விட்டாள் நிலா. இந்நிலையில் அவள் தேவையைக் கேட்டறிந்த ரகு, ஊரடங்கு என்றும் பார்க்காமல் நண்பர் ஒருவரிடம் கடனாக ஒரு தொகையைப் பெற்றுக் கொண்டு, ஃபோன் கடைக்காரத் தம்பியின் வீட்டுக்கு விரைந்தார்.

**"கடைக்காரத் தம்பி.. எனக்கு சூம் வேலை செய்யிறமாதிரி ஒரு நல்ல ஃபோன் குடுப்பா.."**- எனக் கேட்டார்.

**"சரி அய்யா, இது போன மாசம் வந்த ஃபோன்தான். அதுக்கு இருபதாயிரம் தாங்க.நான் இருபத்தையாயிரத்துக்குத்தான் விக்கிறன். உங்களுக்காக புது ஃபோன குறைச்சித் தாரேன்"**- என்று சொல்லி ஃ போனை வாங்கிக் கொண்டு விரைந்தார்.

அவள் அறைக்குள்ளிருந்து அமைதியாகப் படிக்க வேண்டியதை செய்து கொடுத்தார் ரகு.

கடந்த நாட்களை விடவும், நிலா மிக நன்றாகப் படிக்கிறாள் என்பதாக அவர் உணர்ந்தார். மகள் டொக்டர் ஆகிவிடுவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தளவுக்குக் கடுமையாகப் படிக்கிறாள். எனக் கனவை மேலும் வலுப்படுத்திக் கொண்டு, அக்கம் பக்கத்தாரிடம் பெருமைபட்டுத் திரிந்தார்.

அன்று ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்தது. ரகுவின் வீட்டுக்கு வந்த அவரது நண்பர் நிலாவின் படிப்பு பற்றி வினவினார்.

அவருடைய பதில் நிலாவைப் பற்றிய கனவுகளை உள்ளடக்கியதாகவே இருந்தது.

அப்பா பேசுவதை நிலா கதவுக்குப் பின்னாலிருந்து கேட்டுக் கொண்டிருந்தாள். அடுத்த நாள், நிலா அறைக்கதவைத் திறந்து, வெளியே வந்து, அழுது கொண்டே கமலாவை இறுகக் கட்டினாள்.

ரகுவும், கமலாவும் எதுவும் புரியாமல் குழம்பினர். பிறகு அவளைச் சமாதானப்படுத்தி, நடந்ததை அறிய முயன்றனர். நிலா பேசத் தொடங்கினாள்.

நான் ஃபோன்ல நல்லாத்தான் படிச்சி வந்தன். ஒரு கிழமைக்கு பிறகு எனக்கு இன்பொக்ஸ்ல ஒரு மெசேஜ் வந்திருச்சு. அவர் யார்னு தெரிஞ்சு கொள்ள ரெண்டு நாளா அந்த நம்பருக்கு மெசேஜ் பண்ணினன். பிறகுதான் தெரிஞ்சுது, அது பையன் எண்டு.

தன்னோட பேசும்படியா என்கிட்டக் கெஞ்சினான். நானும் அவன் தொல்ல தாங்க முடியாம பேசத்தொடங்கினன். நான் படிக்கிறதுக்கு அவன் உதவினான். அவனோட பேசியதில் எனக்கும் அவனைப் பிடிச்சுப் போச்சு.

ஒரு நாள் வீடியோக் கோலில் ரெண்டு பேரும் பேசிக்கிட்டோம். வாட்டசாட்டமா, லட்சணமாத்தான் இருந்தான். ஒவ்வொரு நாளும் இரவு 10.00 மணிக்குப் பிறகு வீடியோக்கோல் வரும். நானும் பேசுவேன்.

நேற்று அப்பாவோட நண்பர் கிட்ட அப்பா பேசுறத நான் கேட்டன். என்ன நம்பித்தான் இந்தக் குடிசையே இருக்குங்கிறத உணர்ந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால அவன்கிட்ட பேசுறத நிறுத்திட்டு படிக்கலாம்னு நினைச்சன். என்னோட நிலைமையை அவனுக்குச் சொன்னன். அவன் மறுத்ததால், அவன் எண்ணத்துக்கு நான் உடன்படல்ல.

அதுக்கப்புறம் என் ஃபோனுக்கு கொஞ்ச வீடியோ அனுப்பியிருந்தான். என்னோட முகத்த எடிட் பண்ணி, வேற மாதிரிச் செய்திருந்தான். நான் அவன் கூட, கோல் பேசினதையெல்லாம் வீடியோவா வெச்சிருந்தான்.

நான் படிப்ப முடிச்சதும் அவனக் கல்யாணம் பண்ணனும்னு சொன்னான். ஒவ்வொரு நாளும் போன்ல பேசணும். இல்லன்னா.. இதையெல்லாம் நெட்ல போட்டிருவேன்னு மிரட்டுறான் அம்மா. அத்தோட ஒரு உண்மையும் சொன்னான்.

அவன் ஏற்கனவே என்கிட்ட மெக்ஸ் படிக்கிறன் எண்டு சொன்னது பொய். அவன் ஒன்பதாவதிலேயே படிப்ப நிறுத்திட்டு, இப்போ மேசன் வேல செய்யிறவனாம் அம்மா... அவன் டைம் பாஸ்க்குத்தான் போலியா ஒரு ஐடி ஓப்பன் பண்ணினவனாம். அதுல நான் மாட்டிக்கிட்டன் அம்மா.. என்ற போது அவள் குரல் அதிர்ந்தது.

ரகுவும், கமலாவும் செய்வதறியாது திகைத்துப் போயினர்.

ரகு கண்களில் வெள்ளம் பெருக்கெடுத்தது. **"காலங்கெட்டுப் போய்க் கிடக்கு"**- எனச் சிவராசா சொன்ன வார்த்தை அவர் ஞாபகத்துக்கு வந்தது. அப்படியே அருகிலுள்ள கதிரையில் சாய்ந்தார் ரகு!

அன்பான எழுத்தாளர்களே, கவிஞர்களே, ஊடக வியலாளர்களே உங்களிடமிருந்து தரமான கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் ஆகியன எதிர்பார்க்கப்படுகின்றன. நாம் தடைகளைத் தாண்டிப் பயணிக்க உறுதுணையாக இருந்த நீங்கள் எமக்கு தரமான விடயதானங்களை அனுப்புங்கள்.

(ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத மாமறையோன் மணிப்புலவர் மருதூர் மர்ஹூம் மஜித்!

-ஆரையூர் அருள், ஆரையம்பதி-

அறிவாம் அமுதை அள்ளித் தந்தவர்
அறநெறி நின்று அறிவுரை சொன்னவர்
ஆதி மறையின் அருளதைப் பெற்றவர்
ஆதவன் போல அகவிருள் அழித்தவர்
இதயத் தூய்மையால் எம்மிதயம் கவர்ந்தவர்
இனிய வார்த்தையை என்றும் முதித்தவர்
ஈதல் குண இரக்கம் உள்ளவர்
ஈடில்லாப் பற்பல நூல்கள் அளித்தவர்
உண்மையை இறையாய் என்றும் மதித்தவர்
உன்னத சேவையால் நித்திலம் நிறைந்தவர்
ஊனுடல் நலத்தை எடுத்து உரைத்தவர்
ஊக்கம் ஊட்டி உயர்வுறச் செய்தவர்
எண்ணும் எழுத்தும் கண்ணாய் மதித்தவர்
எவரையுமென்றும் சமனாய் நினைத்தவர்
ஏணி தோணி போல் ஏற்றி விட்டவர்
ஏடும் நாடும் போற்ற வாழ்ந்தவர்
ஐயம் திரிபுற அறிவுரை செய்தவர்
ஐம்புல பயிற்சியால் அறிவை விதைத்தவர்
ஒற்றுமைச் சிறப்பை ஓயாது உரைத்தவர்
ஒழுக்கம் வாழ்வின் உயிர் தென்றவர்
ஓர்மை அறிவு ஒருமித் துள்ளவர்
ஓதிய சொல்லை உறுதியாய் காத்தவர்
ஔவை மொழிகளை அடிக்கடி உரைத்தவர்
ஔடதமாகி அறியாமைப் பிணி தீர்த்தவர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# கிழக்கிலிருந்து வெளிவரும் "தென்றல்" சஞ்சிகைக்கு உயர் விருது!



கிழக்கிலிருந்து பல்வேறு தடைகளைத் தாண்டி, கடந்த பதினைந்து வருடங்களாகத் தொடர்ச்சியாக வெளிவந்து சாதனை படைத்துக் கொண்டிருக்கும் "தென்றல்" சஞ்சிகைக்கு கடந்த 18.11.2022 அன்று திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் நடாத்திய கிழக்கு மாகாண இலக்கிய விழாவின் போது விருது வழங்கிக் கௌரமளிக்கப்பட்டது.

இதன்போது விருது மற்றும் சான்றிதழினை சஞ்சிகை ஆசிரியர் கதிரேசபிள்ளை கிருபாகரன் பெற்றுக் கொண்டார். சஞ்சிகைக்கு விருது வழங்கத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் முதல் ஆண்டிலேயே "தென்றல்" சஞ்சிகை இவ்விருதைத் தனதாக்கிக் கொண்டது.

இத்தென்றல் சஞ்சிகை ஈழத்தில் மட்டுமன்றி, ஈழத்தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நல்லுலகம் எங்கணும் கலை மணம் பரப்புகிறது. திருப்பழுகாமத்தைப் பிறப்பிடமாகவும், கல்லடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசிரியரும், ஊடகவியலாளருமான கதிரேசபிள்ளை கிருபாகரன் என்ற தனி மனிதன் "தென்றல்" சஞ்சிகையை ஆரம்பித்தார்.

மட்டக்களப்பு கரித்தாஸ் எகெட் பணிப்பாளராக இருந்த மறைந்த அருட்தந்தை த.சிறிதரன் சில்வெஸ்டரின் திருக்கரங்களால் 2008 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 6 ஆம் திகதி காலாண்டுச் சஞ்சிகையான "தென்றலின்" கன்னி இதழ் விரிக்கப்பட்டது.

இச்சஞ்சிகை அரங்கேற சிரேஷ்ட ஊடகவியலாளரும், மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த பல்வேறு பத்திரிகை களின் ஸ்தாபக ஆசியராகவும் பணிபுரிந்த மறைந்த வீ.சு. கதிர்காமத்தம்பியின் வழிகாட்டலும், ஊக்கமும் இவருக்குப் பக்க பலமாக அமைந்தன.

வளர்ந்து வரும் எழுத்தாளர்களின் ஆக்கங்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்தல், மூத்த எழுத்தாளர்களை இளைய தலைமுறையினருக்கு அறிமுகம் செய்தல், மாணவர்களின் அறிவுப் பசிக்கு விருந்தூட்டல், மட்டக்களப்பின் கலை, கலாசாரம் மற்றும் பாரம்பரியங்களை வெளிக் கொணர்தல் ஆகிய இலக்கினை நோக்காகக் கொண்டு, "தென்றல்" சஞ்சிகை உலகில் காலடி பதித்தது.

இவ்வாறாக பல்வேறு விமர்சனங்கள் மற்றும் தடைகளைத் தாண்டி, பதினைந்தாவது அகவையில் அடியெடுத்து வைத்துள்ள "தென்றல்" இன்னும் பல ஆண்டுகள் தரணியில் பயணிக்க வேண்டுமென்பதே அனைவரதும் பிரார்த்தனையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-கவிதை-

# புள்ளியில் கல்வி

-கதிரவன் த.இன்பராசா-

அக்காவுக்குப் புள்ள பிறந்த
அதான் "சேர்" வரல்ல.....
மொக்கா நீ மருத்துவிச்சா....?
முகத்தில் மட்டும் அடியில்லை.

மூத்தமாமி செத்ததால...
மூன்று நாள் " லீவு சேர்"
ஆத்தா செத்தாலும்தான்.....
அந்தக் கதை சரிவராது....

தேரோட்டம் பார்க்கனும் "சேர்"
தாந்தாமலைத் தீர்த்தம் "சேர்"
தீர்த்தகரை போகனும் " சேர்"
தேவாங்குக் கூட்டங்கள்.

அம்மனுக்கு சடங்கு " சேர்"
அடுத்தநாள் குளுத்தில் "சேர்"
அம்மம்மா அப்புச்சிக்கு....
ஆக்கி வைத்தவ " சேர்"

வைரவரருக்கு செய்த "சேர்"
வயலுக்குள்ள பொங்கனும் "சேர்"
வைரன மாப்புள்ள கேட்டு
வரிசையாய் பெட்டி "சேர்"

கூத்துப் பார்க்க போன "சேர்"
கொஞ்சநேரம் தூங்கித்தன்...
குட்டி மாமா முல்லைத்தீவு
குடும்பத்தோட போன "சேர்"

எங்கள் மண்ணில் இப்படியாய்....
தங்கங்கள் கோடி...கோடி...
மங்க வைக்க வேண்டாம் -தமிழ்
மண் வாழ வேண்டுமிங்கு......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா பெயரில் ஓர் அர்ச்சனை!

-கோவிலூர் செல்வராஜன் -

மிக நீண்ட காலத்திற்கு பின்னர் இயற்கை தனது இயல்பு வாழ்க்கையை, இந்த கொரோனா வைரசின் வருகையால் தான் சில மாதங்களாக பெற்றிருக்கிறது. மனித குலத்தின் வக்கிரங்களாலும்,அண்டைவெளியில் நடைபெற்ற அழிச்சாட்டி யங்களாலும் இயற்கை தனது சுயத்தை இழந்திருந்தது. இப்போது நிலம், கடல், காற்று, ஆகாயம் என்று தனது அம்சங்களில் அது மாற்றத்தையும், புதிய தோற்றத்தையும் காண்கிறது. மனிதகுலம் இப்போது மண்டியிட்டு இருக்கிறது. கொரோனா கொடுத்த அடி, பெருமடியாக விழுந்திருக்கிறது. கொரோனா வைரஸ் சீனாவில் வெளவ்வாலிலிருந்துதோ அல்லது வேறு உயிரினத்திலிருந்தோ, தோன்றியதா அல்லது செயற்கையாக ஆய்வுகூடத்தில் உருவாக்கப்பட்டதா என்பது கேள்விக்கும், ஆய்வுக்கும் உரியது."

இப்படியாக தனக்கு வட்சப்பில் வந்த ஒரு செய்திக் குறிப்பை படித்துக் கொண்டு இருந்தார் ஐரோப்பிய நாடு ஒன்றில் பிள்ளையார் கோவில் ஒன்றை நிறுவி அதில் அர்ச்சகராகவும் தலைமை நிர்வாகியாகவும் இருக்கும் சுந்தரசர்மா அவர்கள். கொவிட் 19 வைரசின் தொற்று உலகம் முழுதும் பரவி இருப்பதால் அனைத்து மதங்களின் வணக்கதலங்களும் பொதுமக்களின் வரவை முடக்கி உள்ளன.சுந்தரசர்மா கோவிலும் அப்படியே முடக்கப்பட்டுள்ளது. அவர் மட்டும் தனிமையில் கோவிலுக்குள் சென்று பிள்ளையாருக்கு பூசை செய்து வருகிறார். அடியார்கள் வராததனால் விஷேட பூசைகளோ, அபிஷேகங்களோ, அர்ச்சனைகளோ இல்லை. இதனால் கோயிலுக்கு வருமானம் கிடையாது.சுந்தரசர்மா வீடுகளுக்கு சென்று நடத்துகின்ற தொடக்கு கழிப்பு, சாந்திசெய்தல், மற்றும் சடங்குகள் கூட இப்போது இல்லை. இந்த வருமானங்கள் இல்லாத சூழ்நிலையில் என்ன செய்வதென்றே தெரியாமல் தனது போனை பார்த்து கொண்டு இருந்தார். அந்தநேரத்தில் அவர் பாரியார் வந்து பேசினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னங்க இப்படியே போனால் எப்படியிங்க கோவிலை நடத்துறது, நம்மட வாழ்க்கையை எப்படி ஓட்டுறது? மூன்று மாதங்களாக நம்மகிட்ட இருந்ததை வைச்சி ஒருமாதிரி எல்லாவற்றையும் சரிக்கட்டினோம். இப்போ எங்கட வீட்டுக்கே சாமான் சக்கட்டுகள் வாங்க பணம் பற்றாமல் இருக்கே என்னங்க பண்ணுறது"

"அதுதான் அம்புஜம் நானும் காலையில் எழுந்ததிலிருந்து யோசனை செய்துகொண்டு இருக்கிறன். கணபதியான் கண்ணைத்திறக்க வேண்டும். ஏதாவது ஒரு வழி பண்ணினால்த்தான் காசைப் பார்க்கலாம் கண்டியோ "

"நாங்க மாதந்தோறும் ஊருக்கு மகளின்ர வீடுகட்ட அனுப்புற காசும்கூட மூன்றுமாதமாக அனுப்பயில்லை. அங்கேயும் ஊரடங்கு என்றபடியால் வேலைகள் ஒன்றும் நடக்கயில்லை அதனால் பரவாயில்லை. ஆனால் அங்கு எல்லாம் சரி என்றால் கண்டிப்பாக வேலை தொடங்கிடுவினம் அப்போ பணம் அனுப்பியே ஆகவேண்டும்"

"அது எனக்கு தெரியாமல் இல்ல அம்புஜம்.இன்றைக்கு ஏதாவது செய்து பணத்துக்கு ஏற்பாடு பண்ணியே ஆகவேணும். நீ போய் உன்ர சமையல் வேலையை பாரும். நான் ஒரு வழி பார்க்கிறேன்"

என்றவர் சிந்திக்கலானார். சற்று நேரம் யோசித்துவிட்டு, முகத்தில் ஒரு புன்முறுவலுடன் தனது கைபேசியை எடுத்து அதை தடவிப்பார்த்து பின்னர் அழுத்திவிட்டு சத்தம் கேட்கும்படி வைத்துகொண்டார்.

"ஹலோ ஆதவன் ஸ்ரோஸ் பிரகாஷ் ஹியர்.

யார் கதைக்கிறீங்க"

"ஹலோ பிரகாஸ் நான் பிள்ளையார் கோவில் சுந்தரசர்மா பேசுறன்"

"ஆ ஐயாவே சொல்லுங்க ஐயா.

எப்படி இருக்கிறியள். எங்கையா கோவில் பக்கமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரமுடியாத நிலையாய் போச்சுது உந்த கொரோனா வந்து ரெண்டு மாதமா கடையும் திறக்கமுடியல. இண்டைக்கு சனிக்கிழமை என்று வந்து இப்பதான் திறந்து வச்சிருக்கிறன். சனம் ஒருத்தரும் வாறதா தெரியல்ல. வழமையா வாற கஸ்டமர் கூட இல்லை. எல்லோரும் வீட்டோட இருக்கினம் போல"

"ஓம் ஓம் லொக்டவுன் என்று சொன்னதால எல்லோரும் வெளியில் வராமல் இருக்கினம். இங்கனைக்குள்ளயும் ஒரு சன சந்தடியும் இல்ல. கோயிலுக்குள் நான் மட்டும் போய் பிள்ளையாருக்கு தீபம் காட்டி பூசை செய்திட்டு வாறான்"

"தெரியும் ஐயா எனக்கும் பூசை அங்கே பூசை ஒன்று இருக்கு.. என்ன செய்வது இப்போதைய நிலையில"

"தம்பி நான் இப்பதான் பூசை செய்பவர்கள் பெயர் பட்டியலை பார்த்தேன். நாளைக்கு உரிய பூசை வழமையா நீங்கள் தான் செய்து கொண்டு வாறியள். அதுதான் உங்களை கேட்பம் என்று எடுத்தனான்." என்றார் சர்மா.

"ஐயா என்ன சொல்லுறியள். இந்த நேரத்தில எப்படி ஐயா நாங்கள் கோவிலுக்கு வந்து பூசை செய்வது. சாமி கும்பிடுறது. வீட்டில் பெண் சாதி பிள்ளைகள் வெளிக்கிடாயினம்"

"தம்பி பிரகாஸ் அது தெரியும்தானே. நீங்கள் ஒன்றும் வரத்தேவையில்ல. நானே வடிவா உங்கட பேரால பூசையச் செய்து எல்லாருக்கும் அர்சனை போட்டு வட்சாப்பில் அனுப்பி வைக்கிறன். உங்களுக்கும் திருப்தி . உங்கட பூசை செய்த மாதிரியும் ஆயிடும் என்ன சொல்லுறியள்"

"அது சரி ஐயா அதற்குரிய சாமான்கள், செலவுகள் எல்லாம் இருக்கல்ல. அதுதான் " என்று யோசித்தான் பிரகாஷ் .

"அதுக்கொண்டும் நீர் யோசியாதேயும். காசை தந்தால் நானே எல்லாம் வாங்கி நெய்வேத்தியத்தோட அபிஷேக பூசைய அமர்களமாய் செய்து போட்டு போட்டோக்களை அனுப்பிவிடுவன்"

"அப்படியா ஐயா. அப்ப காசு எவ்வளவு மட்டில் வரும் ஐயா"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வழமையா முன்னூறு தானே கொடுக்கிறது. நீங்க இப்ப இருநூற்றுஐம்பது அனுப்பிவிடுங்க நான் அதுக்குள்ள எல்லாம் சரிப்பண்ணிப் போடுறன்."

"சரியையா நான் உங்கட எக்கவுண்டில் போட்டுவிடுறன். இப்பவே ஒன்லையில் போட்டுவிடுறன் உங்கட எக்கவுண்ட் நம்பர், பேங்க் பற்றிய விபரம் எல்லாம் எனக்கு அனுப்பி விடுங்கோ"

"சரி உடனே அனுப்புகிறேன்" என்று சொல்லி தனது விபரங்களை அனுப்பிவிட்டு, "சரிதம்பி. அப்ப நாளைய பூசைய அமர்களமாய் செய்துபோடுறன். அப்ப வைக்கட்டே."

"ஓம் வையுங்கள். முடிஞ்சால் கொரோனா பெயரில் ஒரு அர்ச்சனை செய்து அதை அடியோட ஓட்டப் பாருங்க ஐயா" என்று வைத்துவிட்டான் பிரகாஷ்.

இப்போது சுந்தரசர்மா முகத்தில் சந்தோசம் ஒருத்தர மடக்கிடோம். அடுத்தவரை பிடிப்போம் யாரைப்பிடிக்கலாம் என்று யோசித்தவருக்கு சட்டென்று எக்கவுண்டன் சரவணன் நினைவுக்கு வர அவருக்கு அழைப்பை ஏற்படுத்தினார் சர்மா.

"ஹலோ... ஹலோ "

"ஹலோ, நான் பிள்ளையார் கோயில் சுந்தரசர்மா கதைக்கிறன்"

"ஆ ஐயாவே சொல்லுங்கையா எப்படி இருக்கிறியள்"

"பரவாயில்ல ஏதோ கோயிலோட வீடு எண்டபடியால் இரண்டையும் பார்த்து கொண்டு இருக்கிறன் சரவணன்"

"அதுசரி வேறு என்னதான் செய்வது வீட்டோடு இருந்து அலுப்படிக்குது வேலையும் இல்ல ஒன்றும் இல்ல வீட்டில் இருந்து கொண்டு வீட்டுக்காரிக்கு சமையலுக்கு வெங்காயம் வெட்டி கொடுக்கிற பிழைப்பாய் போயிட்டு ஐயா"

"எல்லார்பாடும் அப்படித்தான் ஆயிட்டுது. கடுகதியில கணபதியான் நம்மை காத்து அருளுவான்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயா சொன்னாப்போல எப்படியையா கோவில் நடக்கிது. ஆக்கள் ஒருத்தரும் வரமாட்டினம் நம்மட சைவக் கோவில்கள் மட்டுமல்ல, சேர்ச்சுகள், மொஸ்க்குகள் எல்லாம் மூடியே கிடைக்கின்றன."

"மூடிக் கிடந்தாலும் தம்பி, மத குருமார்கள் வழிபாடு செய்வார்கள்தானே. நம்மட கோவிலிலும் நான் மூன்று நேர பூசைகள் செய்கிறன்தானே. தனிபூசை உள்ளவர்களுக்கு அவர்களின் பூசையை செய்து அனைத்தையும் வட்சப் மூலம் உடனே அனுப்பி விடுகிறேன்"

" அட, அப்பிடியே சங்கதி. எங்கட பூசையும் ஒண்டு இருக்குதே ஐயா "

"ஓம் அதை சொல்லத்தான் இப்ப நான் எடுத்தனான். பெயர் பட்டியலில் உங்கட பூசை நாளை மறுநாள் இருக்கு."

" ஐயா கண்டிப்பாக எங்களால வரமுடியாது. வீட்டில் மனுசிக்கு தெரிந்தால் எப்படியும் போவோம் என்று நிப்பா. கோவில் என்றால் இனி அவவை கேட்கவே வேணும். அதனால் அவவுக்கு தெரிய படுத்த வேண்டாம் "

"இல்லை இல்ல நீங்க வரத்தேவையில்ல,உங்களை வரச்சொல்லி நான் சொல்லப் போறதுமில்ல, மற்ற பூசைக்காரருக்கு செய்யிறதுபோல நானே உங்கட பெயரில் எல்லாம் செய்து வட்சப்பில் மந்திரங்களுடன் குடும்ப பெயர்களுக்கு அர்ச்சனையும் செய்து அனுப்பி விடுகிறேன். செலவை மட்டும் அனுப்பி விடுங்க."

"என்னய்யா சொல்லுறீங்க புரியல்ல "

"பூசை சாமான், அபிஷேகத்துக்குரிய பொருட்கள் பால், பழங்கள் என்று வாங்க வேண்டுமல்ல. பணத்தை அனுப்பி விட்டால் நான் பக்கத்துக் கடையில வாங்கி எல்லாம் பண்ணி முடிக்கிறன். சரிதானே சரவணன்"

"ஐயா பூசைக்கு உரிய விசயமெல்லாம் இவதான் பாக்கிறவ. எனக்கு ஒன்றும் தெரியாது. காசு எவ்வளவு வரும் என்றும் தெரியாது"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கட அவவுக்கு தெரியும் பூசைக்கு முன்னூறு தான் மொத்தமா தருவா, நீங்க இப்போதைக்கு இருநூற்றி ஐம்பது போட்டுவிடுங்க. என்ர எக்கவுண்ட் விபரங்களை தாறன் சரியே."

"கொஞ்சம் டைட்டாத்தான் இருக்கையா. எதற்கும் அனுப்புங்க நான் எப்படியும் பார்த்து அனுப்பி விடுகிறேன் கோவில் விஷயம் எண்டு வந்தால் எப்படியும் செய்து முடிக்கணும் என்று இவ சொல்லுவா நீங்க அனுப்புங்க ஐயா"

"சரி ராசா, நான் வட்சப்பில் எல்லா விபரமும் அனுப்புகிறேன்." என்று சொல்லி கதைக்கிறதை நிறுத்திவிட்டார் சுந்தரசர்மா.

இப்போ சமையல் அறையிலிருந்து அழைப்பு வருகிறது.

"என்னங்க வாங்க காலை சாப்பாடு ரெடி ஆயிட்டு. எனக்கும் மாலை கட்டுற வேலையிருக்கு." என்றார் அம்புஜம்மாள் .

"இதோ வந்திட்டன் அம்புஜம் இன்னுமொரு போன்கால் எடுத்திட்டு வந்திடுறன்" என்றவர். தனது போனில் வேறு ஒரு நம்பருக்கு முயற்சிக்கும் போது, அவரின் போனுக்கு ஒரு அழைப்பு வந்தது.

"ஹலோ வணக்கம்"

"ஐயா வணக்கம் நான் மணியம் பேசுகிறேன் ஐயா.ஞாபகம் இருக்கோ ஐயா நான் கோவிலுக்கு வழக்கமாக வாறனான். இந்த கொரோனா வருவதற்கு முதற்கிழமை வந்து உங்களை சந்தித்து என் கிரகபலன் பார்த்தனான்"

"அடடா மணியன் தம்பியே சொல்லுமையா எப்படி இருக்கிறீர்."

"இருக்கிறன் ஐயா லொக்டவுன் வந்ததும் வந்தது இப்ப வீட்டோடுதான்.டாக்சி ஓடவும் முடியாது. தப்பித்தவறி போனால் வந்து ஏறுபவர்கள் கொரோனா நோயாளிகளோ என்று பயம் வந்தது அதனால் இரண்டு மதங்களுக்கு முன்னமே நிறுத்திப்போட்டன். இந்த புது வருஷம் எனக்கு அவ்வளவு நல்லா இல்லை ஐயா."

" நீர் கடக ராசியல்லே கடந்தமுறை வந்தபோது கடகராசி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலன் என்னவெண்டு கேட்டுபோனதாய் எனக்கு ஞாபகம் இல்லையே "



"சரிதான் ஐயா,என்ர ராசி கடகராசி தான்." "தம்பி இந்த வருட ராசிப் பலன்களில் நான்கு ராசிகளுக்கு போதாதகாலம். அதில் கடக ராசியும் ஒன்று. ஆனால் பரிகாரம் இருக்கிறது. சாந்தி செய்தால் சரியாக்கிடலாம்."

அப்பிடியே ஐயா அதுதான் உங்களுக்கு நான் இப்ப போன் எடுத்தனான்.நான் எப்படி ஐயா வந்து உங்களை சந்திப்பது"

"தம்பி நீர் ஒன்றும் வரத்தேவையில்லை நானே இங்கே கோவிலில் வைத்தே உந்த பிரச்சினையை முடிச்சுவிடுவன். உம்மட குறிப்பு என்னிடம் இருக்குதானே. அதைவைத்து கணக்குப் பார்த்து சரிக்கட்டி விடலாம். உன் பெயரில் அர்ச்சனைகள்செய்துவிசேடபூசையும்ஒண்டுபிள்ளையாருக்கு செய்தம் என்றால் எல்லாம் சரியாகிடும் " "ஐயா அப்பிடியானால் அதை உடனே செய்யுங்கோ நான் செலவுக்குரிய காசை தாறன்."

"ஓம் அப்பிடியே செய்துபோட்டு எல்லாத்தையும் வட்சப்பில் அனுப்பி விடுகிறேன். காசு முந்நூறு வரும் நீர் இருநூற்றி ஐம்பது அனுப்பும் நான் பார்த்து கொள்கிறேன் சரியே"

"சரியையா சந்தோசமையா.காசை நான் அனுப்பி விடுகிறேன் உங்கட எக்கவுண்ட் நம்பரை தாருங்கோ"


"ஓம் இப்பவே போட்டு விடுகிறேன்.காசை போட்டுவிடும் .மற்ற விஷயம் எல்லாம் நல்ல மாதிரி நடக்கும் வைக்கட்டே" என்று கட் பண்ணினார் சுந்தரசர்மா.

மீண்டும்அம்புஜத்தின்அழைப்புவர,தனதுகாலைஉணவிற்காக எழுந்து போனார் பிள்ளையார் கோவில் சுந்தர சர்மா.. இன்றைய அவர் வருமானம் எக்கச்சக்கம். என்று அறிந்ததும் அம்புஜம் அவரை விழுந்து விழுந்து உபசரித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements from*

# Vijay Construction & Co.

Quality work. One name. One legend.

**Services: Civil Engineering constructor, Distributor for Nestle Products, Dealer of Mitsui & Tokyo super cement, Transport & Heavy Machinery Equipment Services, General Merchant & Commission Agent**

**Head Office:**
130/1, Trinco Road, Batticaloa.
Tel. No: 0652223292
Fax No: 0652223045
e-mail: vijayconstvrm@yahoo.com

**Branch Office:**
ThillaiVasam, Paddiruppu,
Kaluwanchikudy
Tel. No: 0652250002
Fax No: 0652250002




காந்தள் அச்சகம்
புதுக்குடியிருப்பு
0652226722 /754390273

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org